# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 127 /பேரூ./2025**
**நாள் : 17.07.2025**

திரு. K. பாலசுப்ரமணியன்,
மோகனூர்,
நாமக்கல் மாவட்டம். முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம். எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஒடுவந்துார் அஞ்சல், கதவு எண். 9/56, தொட்டிபட்டி, என்ற முகவரியை சேர்ந்த திரு. K. பாலசுப்ரமணியன் என்பவரது 02.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.04.2025 அன்று பெறப்பட்டு, 127/பேரூ./2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஒடுவந்துார் அஞ்சல், கதவு எண். 9/56, தொட்டிபட்டி என்ற முகவரியை சேர்ந்த திரு. K. பாலசுப்ரமணியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 02.04.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், மோகனூர் பேரூராட்சிக்கு சொந்தமான களம் புறம்போக்கு நிலம் புல எண். 385ல் உள்ளது. இந்த இடத்தில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பாகவே அந்த களத்து புறம்போக்கில் துப்புரவு பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதாக பேரூராட்சியில் அறிவித்தார்கள். அப்போது 26.11.2010-ல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் அந்த களத்து புறம்போக்கில் களம் மற்றும் ஏராளமான தென்னை மரங்கள் இருப்பதால் அதை அகற்றக்கூடாது என்று நான் கொடுத்த கடிதத்திற்கு மோகனூர் பேரூராட்சி செயலாளர் கொடுத்த பதிலில் அவ்விடத்தில்

ஆக்கிரமிப்புகளை அகற்றி அவ்விடத்தில் துப்புரவு பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளது. அவ்விடத்தில் தென்னை மரங்கள் மற்றும் களத்திற்கு பாதிப்பு ஏற்படாமல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தெரிவித்தனர். ஆனால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்படவில்லை. ஆனால் தற்போது அவ்விடத்தில் தென்னை மரங்கள் மற்றும் களத்தை அழித்து எனக்கும், மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் கொடுத்த கடிதத்திற்கு நேர்மாறாக தென்னை மரங்கள் மற்றும் களம் புறம்போக்கை அழித்து மோகனூர் பேரூராட்சியால் சமுதாயக்கூடம் கட்டப்பட்டுள்ளது. விவசாயிகள் பயன்படுத்திய களம் என்பதை உணராமலும், தென்னை மரங்களை அழித்தும் மோகனூர் பேரூராட்சி இந்த செயலில் ஈடுபட்டுள்ளது. தற்போது அந்த பகுதியில் உள்ள விவசாயிகள் களங்களை பயன்படுத்த முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஏற்கனவே இதுபோன்ற களங்கள் சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வு நெல்லை மாவட்டம், ஜோதிபுரம் கிராமத்தில் களத்தை அழித்து சூப்பர் மார்க்கெட் கட்டுவதற்கு தடை விதித்துள்ளது. எனவே மோகனூர் பேரூராட்சி எனக்கும், மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் அனுப்பிய கடிதத்திற்கு நேர்மாறாக தற்போது களத்தில் சமுதாயக்கூடம் கட்டி உள்ளனர். இதனால் விவசாயிகளுக்கு பெருத்த இடையூறு செய்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் விவசாயிகள் பயன்படுத்தும் களத்தை வருவாய்த் துறையினர் வகை மாற்றம் செய்து மோகனூர் பேரூராட்சிக்கு வழங்கியுள்ளனர். இதில் வருவாய் துறையினர் களத்தை வகை மாற்றம் செய்வதற்கு முன்பு விவசாயிகளுக்கு தெரிவிக்கின்ற வகையில் எந்தவித முன்னறிவிப்பு வெளியிடாமலும், விவசாயிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் நடத்தாமலும், விவசாயிகளின் பயன்பாட்டு களத்தை தன்னிச்சையாக வகை மாற்றம் செய்துள்ளனர். எனவே உடனடியாக வகை மாற்றத்தை இரத்து செய்யுமாறும், களத்தில் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடத்தை உடனடியாக அப்புறப்படுத்த உள்ளாட்சி முறையீட்டு மன்ற நடுவர் அவரிடம் இந்த புகாரை பதிவு செய்து தக்க விசாரணை செய்து தகுந்த தீர்ப்பு வழங்க முறையீட்டு மன்றத்தை தாழ்மையுடன் வணங்கி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர், திருமதி. இரா. கலைராணி என்பவர் தனது 12.06.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 761/2025/அ1-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

நாமக்கல் மாவட்டம், மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் தங்களுக்கு சமுதாயக்கூடம் ஒன்று வேண்டுமென்று தொடர்ந்து நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நாமக்கல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அவர்களிடம் கோரிக்கைகள் வைக்கப்பட்டதை தொடர்ந்து, மோகனூர் பேரூராட்சி எல்லைக்குள் சமுதாயக்கூடம் கட்டும் பணியானது தமிழ்நாடு அரசால் தேர்வு செய்யப்பட்டு, அப்பணிக்கு உரிய இடம் ஒதுக்கி தருமாறு நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

இதன்பேரில், மோகனூர் பேரூராட்சி பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையில், மோகனூர் பேரூராட்சி எல்லைப் பகுதிக்குள் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்ட பொழுது போதிய வேறு இடம் இல்லாததால், சர்வே எண். 385-ல் மொத்தப் பரப்பளவு

0.41.0 ஹெக்டேர் கொண்ட "அரசு புறம்போக்கு களம்" என வகைப்பாடு செய்யப்பட்ட இடம் தேர்வு செய்யப்பட்டது.

இந்த இடம், கடந்த 20 ஆண்டுகளாக பயன்பாடற்ற நிலையில் இருந்து வந்ததாலும், அந்த இடத்தில் தென்னை மரங்கள் மட்டுமே அமைந்து, அவை மோகனூர் பேரூராட்சி மூலம் ஏலம் விடப்பட்டு வந்ததாலும், கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு, ஏற்பட்ட வறட்சியின் காரணமாக அந்த தென்னை மரங்கள் பட்டுப்போய் விட்டதாலும், எவ்வித பயன்பாடும் இல்லாத மேற்படி "அரசு புறம்போக்கு களம்" என்ற இடம் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 24.11.2021 நாளிட்ட செயல்முறைகள் நி.மு/10510/2020/எல்.2-ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி 385/1, 385/2 என உட்பிரிவு செய்யப்பட்டது.

இதில், சர்வே எண். 385/1ல் விஸ்தீர்ணம் 0.230 ஹெக்டேர் நிலத்தினை "செயல் அலுவலர், மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சி" என்று உட்பிரிவு செய்து, சமுதாயக்கூடம் கட்டும் பணிக்காக மோகனூர் பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு வழங்கப்பட்டது. மீதமுள்ள இடம் 385/2ல் விஸ்தீர்ணம் 0.18.0 ஹெக்டேர் நிலத்தினை "களம்" என்ற பெயரிலேயே இருந்து வருகிறது.

இவ்வாறு, மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு நிலமாற்றம் செய்யப்பட்ட இடத்தில் அரசாணை (நிலை) எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள் 27.12.2021-ன்படி 2021-2022ஆம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.280.00 இலட்சம் மதிப்பீட்டில் சர்வே எண். 385/1ல் சமுதாயக்கூடம் கட்டும் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இப்பணிக்கு 11.01.2022 நாளிட்ட சென்னை பேரூராட்சிகளின் ஆணையரக கண்காணிப்பு பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 11538/2021/ஆ4ன்படி சென்னை பேரூராட்சிகளின் ஆணையரக கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, அதன்பேரில் 25.02.2022 நாளிட்ட மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலக பணியாணை ந.க.எண். 213/2021-ன் பணி ஆணை வழங்கப்பட்டு, சமுதாயக்கூடம் கட்டும் பணியானது கடந்த 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தற்போது கட்டி முடிக்கப்பட்டு, அதனை கடந்த 29.05.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கும் கொண்டு வரப்பட்டு, மோகனூர் பேரூராட்சிக்கு வருவாய் தரத்தக்க இனமாக உள்ளது.

இந்நிலையில், சர்வே எண். 385-ல் பரப்பளவு 0.41.0 ஹெக்டேர் "அரசு புறம்போக்கு களம்" என்று வகைப்பாடு செய்யப்பட்ட நிலத்தை சர்வே எண். 385/1 மற்றும் 385/2 என்று உட்பிரிவு செய்யப்பட்டு, அதில் மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சர்வே எண். 385/1ல் உள்ள இடத்தில் மட்டும் சமுதாயக்கூடம் கட்டப்பட்டுள்ளது. மீதமுள்ள இடம் "களம்" என்ற வகைப்பாட்டில் தொடர்ந்து இருந்து வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 26.06.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.06.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. K. பாலசுப்ரமணியன் என்பவர் 26.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- நாமக்கல் மாவட்டம், மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சிக்கு சொந்தமான களம் புறம்போக்கு நில புல எண். 385ல் தூய்மைப் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்ட 15 ஆண்டுகளுக்கு முன்பு பேரூராட்சியால் அறிவிப்பு செய்ததைத் தொடர்ந்து, 26.11.2010ல் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் களத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தென்னை மரங்களுக்கும் மற்றும் களத்திற்கும் எவ்வித பாதிப்பு ஏற்படாத வகையில் தூய்மைப் பணியாளர்களின் குடியிருப்பு கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பேரூராட்சி செயல் அலுவலரால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அறிக்கை அளித்தனர். ஆனால் அக்குடியிருப்பு கட்டப்படவில்லை.

- இந்நிலையில் விவசாயிகள் பயன்படுத்திய களம் என்பதை கருத்தில் கொள்ளாமலும், தென்னை மரங்களை அழித்தும் தற்போது சமுதாயக் கூடம் கட்டியுள்ளனர்.

- விவசாயிகள் பயன்படுத்தும் களத்தினை, எவ்வித முன்னறிவிப்பின்றியும் விவசாயிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்படாமலும் தன்னிச்சையாக வருவாய்த் துறையால் களத்தை வகை மாற்றம் செய்து மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சிக்கு வழங்கியுள்ளனர்.

- எனவே, விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், வருவாய்த் துறையால் களத்தை வகை மாற்றம் செய்ததை ரத்து செய்யவும் மற்றும் களத்தில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடத்தை உடனடியாக அப்புறப்படுத்தவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர், திருமதி. இரா. கலைராணி என்பவர் 26.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- நாமக்கல் மாவட்டம், மோகனூர் கிராமப் புல எண். 385ல் மொத்த பரப்பளவு 0.41.0 ஹெக்டேர் கொண்ட அரசு புறம்போக்கு “களம்” என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட வறட்சியின் காரணமாக அங்குள்ள தென்னை மரங்கள் பட்டுப் போய், எவ்வித பயன்பாடற்ற நிலமாக இருந்து வந்தது.

- மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட இடத்தில் சமுதாயக் கூடம் ஒன்று அமைக்கக் கோரி பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கையின் அடிப்படையில் பேரூராட்சி செயல் அலுவலரின் கருத்துருவை பரிசீலித்து,

வருவாய்த் துறையால் புல எண். 385ல் 0.41.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட அரசு புறம்போக்கு களம் வகைப்பாட்டிலுள்ள நிலத்தை புல எண். 385/1 (0.23.0 ஹெக்டேர்) எனவும் 385/2 (0.18.0. ஹெக்டேர்) எனவும் உட்பிரிவு செய்து, பொது நோக்கத்திற்கு பயன்படுத்தும் பொருட்டும், வருவாய்த் துறையால் விளம்பரம் செய்யப்பட்டும் எவ்வித ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறவில்லை என்பதாலும் புல எண். 385/1 பிரிவு கொண்ட அரசு புறம்போக்கு "களம்" வகைப்பாட்டிலிருந்த நிலத்தை செயல் அலுவலர் மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சி என்ற வகைப்பாட்டிலும் புல எண். 385/2 கொண்ட நிலத்தை களம் என்ற வகைப்பாட்டிலும் நில மாறுதல் செய்து, நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் நி.மு.10510/2020/எல்2, நாள் 24.11.2021-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

- 2021-22ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.280 இலட்சம் மதிப்பீட்டில் புல எண். 385/1ல் சமுதாயக் கூடம் கட்ட அரசாணை (நிலை) எண். 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை நாள் 27.12.2021ல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டதன் அடிப்படையிலும் மற்றும் சென்னை, பேரூராட்சிகளின் ஆணையரக கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் 11.01.2022 நாளிட்ட தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட நிலையிலும் சமுதாயக் கூடம் புதிதாக கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.05.2025 அன்று திறந்து வைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

- புல எண். 385/2ல் 0.18.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடமானது களம் என்ற வகைப்பாட்டில் தொடர்ந்து இருந்து வருகிறது என பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது 02.04.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் நாமக்கல் மாவட்டம், மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட களம் புறம்போக்கு நில புல எண். 385-ல் களம் மற்றும் தென்னை மரங்களை அழித்து மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சியால் சமுதாயக்கூடம் கட்டியுள்ளதன் மூலம் விவசாயிகள் களத்தினை பயன்படுத்த முடியாமல் பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது எனவும், மேற்படி களத்தினை எவ்வித அறிவிப்புமின்றி வருவாய்த் துறையால் பேரூராட்சிக்கு வகை மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவும் புகாராக தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் கிராமப் புல எண். 385-ல் 0.41.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட அரசு புறம்போக்கு 'களம்' என்ற வகைப்பாட்டிலுள்ள நிலத்திலிருந்த தென்னை மரங்கள் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட வறட்சியின் காரணமாக மரங்கள் பட்டுபோய், பயன்பாடற்ற நிலையில் இருந்து வந்தது என்பதும், இந்நிலையில் மோகனூர் பேரூராட்சியில்

சமுதாயக்கூடம் ஒன்றை அமைக்கக் கோரி பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கையின் அடிப்படையில் பேரூராட்சி செயல் அலுவலரின் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கை மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரின் பரிந்துரையின்படி, மேற்படி புலத்தில் உள்ள களம் தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லை என்பதும், பொதுமக்கள் யாரும் மேற்படி புலத்தினை களமாக பயன்படுத்தவில்லை என்பதும், பொது நோக்கத்திற்கு பயன்படுத்தும் பொருட்டு விளம்பரம் செய்தும், ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை என்பதால் மோகனூர் கிராமம் புல எண். 385-ல் மொத்தப் பரப்பளவு0.41.0 ஹெக்டேர் அரசு புறம்போக்கு 'களம் ' என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலத்தை உட்பிரிவு செய்து புல எண். 385/1-ல் 0.23.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலத்தை செயல் அலுவலர், மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சிக்கு உட்பட்டது எனவும், 385/2-ல் 0.18.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலத்தை "களம்" எனவும் உட்பிரிவு செய்யப்பட்டு நில மாறுதல் செய்து நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் நி.மு. 10510/2020/எல்.2 நாள் 24.11.2021-ல் ஆணையிடப்பட்டுள்ளது என்பதும்,

இதனைத் தொடர்ந்து 2021-22ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.280 இலட்சம் மதிப்பீட்டில் புல எண். 385/1ல் சமுதாயக் கூடம் கட்ட அரசாணை (நிலை) எண். 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை, நாள் 27.12.2021ல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டதன் அடிப்படையிலும் மற்றும் சென்னை, பேரூராட்சிகளின் ஆணையரக கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் 11.01.2022-ல் நாளிட்ட செயல்முறைகள் ந.க.எண். 11538/2021/ஆ4-ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட நிலையிலும் சமுதாயக்கூடம் புதிதாக கட்டப்பட்டு 29.05.2025 அன்று முதல் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதும் புல எண். 385/2ல் 0.18.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலமானது களம் என்ற வகைப்பாட்டில் தொடர்ந்து இருந்து வருகிறது என்பதும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேற்காணும் நிலையில், மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. K. பாலசுப்ரமணியன்,
கதவு எண். 9/ 56, தொட்டிபட்டி,
ஒடுவந்தூர் அஞ்சல், மோகனூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் - 637 015.

2) செயல் அலுவலர்,
மோகனூர் தேர்வுநிலை பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்